## இயல் 6.2 - இயற்கணிதம்

### பயிற்சி எண் :: 6.2.1.2.B

### வினா எண் :: 1

**நமது கிராமத்தில் உள்ள அரசு பள்ளி, 6-ம் வகுப்பு முழுஆண்டுத்தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களை அறிவித்தது. 6-ம் வகுப்பு தேற்சிபெற்ற செல்வி, கணிதத்தில் எடுத்த மதிப்பெண்கள் அவள் ஆங்கிலத்தில் பெற்ற மதிப்பெண்ணின் இரு மடங்கைவிட 10 குறைவு. இதை ஒரு சமன்பாட்டில் அமைத்து எழுதுக.**

---

செல்வி கணிதத்தில் பெற்ற மதிப்பெண்களை $x$ எனும் மாறியாகவும், அவள் ஆங்கிலத்தில் எடுத்த மதிப்பெண்களை $y$ எனும் மாறியாகவும் கொள்க.

கணிதத்தில் எடுத்த மதிப்பெண்கள் அவள் ஆங்கிலத்தில் பெற்ற மதிப்பெண்ணின் இரு மடங்கைவிட 10 குறைவு.

$$\therefore \overbrace{\text{கணிதத்தில் மதிப்பெண்கள்}}^{x} = 2 \times \overbrace{\text{ஆங்கிலத்தில் மதிப்பெண்கள்}}^{y} - 10$$

$$x = 2y - 10$$

### விடை

$$x = 2y - 10$$

Sum & solution prepared on Saturday 8th May, 2021 :: 21:32 Hrs.
All rights related to content above such as creation of the problem, solution, voice over, Video creation are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.